**பஸ்ஸர பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்ததுடன், அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 30 திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து பஸ்ஸர பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய முத்திரை கட்டணம் ரூபா 966,702 தொகை மிகையாக கணக்கீடு செய்திருந்தமையால் மிகைகள் மற்றும் நடைமுறை சொத்துக்கள் அப் பெறுமதியினால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்த போது கழிக்கப்பட்ட கழிவுக்காக கிடைத்த ரூபா 32,680 இற்கான நூலக புத்தகங்களை நிலையான சொத்துக்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது மாகாண குறித்த அபிவிருத்தி மானியத்தின் கீழ் மில்ல கந்துர 10 வீடுகள் பாதையை அபிவிருத்தி செய்யும் ஒப்பந்த வேலையின் தடுத்து வைத்தல் பணம் வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாமையால் நடைமுறை பொறுப்புகள் ரூபா 37,278 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய பெக்கோ லோடர் வாடகை ரூபா 89,300 தொகையினை ஆண்டிற்கான வருமானம் மற்றும் பெறவேண்டிய வருமானம் என கணக்கீடு செய்திருக்காமையால் மிகைகள் மற்றும் நடைமுறை சொத்துக்கள் அப்பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 24,597,254 தொகையும் பெற வேண்டிய கணக்கு மீதியில் ஒரு வருட காலம் நிலுவையாக காணப்பட்ட ஏக்கர் வரி ரூபா 267,003 தொகை, 5 வருடங்கள் நிலுவையாக காணப்பட்ட வாடகை ரூபா 136,041 மற்றும் நிலுவையாகவுள்ள ஏனைய

வருமானங்கள் ரூபா 2,594,985 தொகை மற்றும் ஒருவருட காலத்தை கடந்துள்ள நிலுவை மூலதன உதவி ரூபா 21,599,225 தொகை என்பன அடங்கியிருந்தன.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 23,027,311 தொகை செலுத்த வேண்டிய கணக்கு மீதியில் முறையே 03 வருடங்களில் 02 வருட காலம் கடந்துள்ள செலவு கடன்கொடுத்தோர் ரூபா 938,468 தொகை மற்றும் ரூபா 22,049,757 தொகை, 01 வருடத்தை கடந்துள்ள ஒய்வூதிய கடன்கொடுத்தோர் ரூபா 39,086 தொகை மீளாய்வாண்டின் போது தீர்த்திருக்கவில்லை.

**1.3.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இண்மை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 136,825,634 தொகைக்கான 05 கணக்கு விடயம் ஒன்றினை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுதி செய்ய முடியாதிருந்தது.

**1.3.4 இணக்கமின்மை**

**1.3.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவம் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை விதி 217 மற்றும் 218 | | கணிப்பீட்டு சபை ஒன்றின் மூலம் சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களை கணிப்பீடு செய்திருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | |
| | (i) நிதிப் பிரமாணம் 104(4) | 269,738 | கப் வண்டி ஒன்றிற்கு மற்றும் பெக்கோ லோடருக்கு 2014 ஆண்டின் போது ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பாக முழுமையான அறிக்கை சமர்பித்திருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) நிதிப் பிரமாணம் 189 | 75,712 | 1994 மற்றும் 1996 ஆண்டுகளின் போது கடை வாடகைக்காக கிடைத்திருந்த 03 காசோலைகள் மதிப்பளிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பெறுமதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 371 | 88,496 | 2004, 2006 மற்றும் 2013 ஆண்டுகளின் போது சபையினால் பல்வேறு தரப்பினர்களுக்கு மூன்று சந்தர்பங்களில் வழங்கியிருந்த முற்பணங்களை திருப்பி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 9,166,523 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,444,561 தொகை ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

சபைக்கு சொந்தமான 3 நடைமுறைக் கணக்குகளின் 2017 ஆண்டின் போது செயற்பாட்டு அலுவல்கள் இன்றி காணப்பட்ட ரூபா 3,174,421 இற்கான மீதியொன்று பேணப்பட்டிருந்ததுடன் அந்த பணத்தை ஆக்கபூர்வமான முதலீடு ஒன்றில் ஈடுபடுத்துவதில் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 2.2.1 வருமான நிருவாகம்

### 2.2.2 மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் , சிட்டை இடப்பட்ட வருமானம் , சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 மதிப்பீட்டு வருமனம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரித்த வருமானம் | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பீட்டு வருமனம் | 2016 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2016 சேகரித்த வருமானம் | 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 488,542 | 488,394 | 375,963 | 112,430 | 488,545 | 484,085 | 416,785 | 67,300 |
| (ii) வாடகை | 5,614,758 | 6,948,890 | 6,905,348 | 43,542 | 10,420,900 | 7,788,446 | 7,708,596 | 79,850 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | -- | 695,450 | 695,450 | --- | 699,010 | 699,010 | 699,010 | -- |
| (iv) ஏனைய வருமானங்கள் | 2,756,289 | 2,625,490 | 1,377,167 | 1,248,323 | 2,662,999 | 2,747,627 | 1,672,118 | 1,075,509 |
| மொத்தம் | 8,859,589 | 10,758,224 | 9,353,928 | 1,404,295 | 14,271,454 | 11,719,168 | 10,496,509 | 1,222,659 |

### 2.2.3 வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை

2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு மொத்த சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 10.7 மில்லியன் ஆக இருந்ததுடன், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 9.3 மில்லியன் ஆக இருந்தது. நிலுவை வருமானம் ரூபா 1.4 மில்லியன்இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது அறவீடு செய்தல் 14.8 சதவீதத்தினால் குறைந்திருந்தது.

### 2.2.4 வாடகை

2004 ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டு பெறுமதியினை அடிப்படையாக கொண்டு வாராந்த சந்தையிலுள்ள 20 கடைகள் மற்றும் பஸ் நிலையத்திலுள்ள 08 கடைகளுக்காள வாடகை அறவிடப்பட்டிருந்த போதிலும், 2017 ஆண்டிற்கான புதிய பெறுமதி மதிப்பீட்டின் மீது வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 அனுமதிப்பத்திர கட்டணம்

1987 இல் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 149 மற்றும் 159 மற்றும் 2016 திசெம்பர் 23 திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 1999 ஆம் இலக்க வர்த்தமானியின் கட்டளை/ அறிவுரை இன் பிரகாரம் சபையின் அதிகார பிரதேசத்தில் நடாத்தப்படுகின்ற வர்த்தக நிலையங்களுக்கு வருடாந்த அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும் எனினும், 2017 ஆண்டிற்காக 12 வர்த்தக நிலையங்களுக்கு வியாபார அனுமதிப் பத்திரம் வழங்கியிருக்காமையால் ரூபா 15,675 தொகை அனுமதிப் பத்திரக் கட்டணம் நிலுவையாக காணப்பட்டது.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 9,274,013 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 6,012,556 தொகை காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

1987 பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் , பொது மக்களின் சுகபோக வாழ்வு , வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) துணை விதிகள்

1987 பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 126 இன் பிரகாரம் 30 பிரதான விடயங்கள் நிறைவேற்றுவதற்காக துணைவிதிகள் ஆக்கப்பட வேண்டுமெனினும், 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 07 துணை விதிகள் ஆக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செயல் நடவடிக்கை திட்டம்

மீளாய்வாண்டிற்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

#### (இ) திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவம்

2015 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை சேதனப் பசளை செயற்தளம் நிர்மாணிப்பதற்காக ரூபா 9,228,219 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

#### (ஈ) சுற்றாடல் சார் சிக்கல்கள்

1988 இன் 56 இலக்கம் மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களின் திருத்தப்பட்ட 1980 இன் 47 இலக்கம் கொண்ட தேசிய சுற்றாடல் சார் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றும் 2008 ஜனவரி 23 ஆந் திகதிய 533/16 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சுற்றாடல் அனுமதி பத்திரம் பெறவேண்டியிருந்த போதிலும், 27 வியாபாரங்களுக்காக கணிப்பீடு மேற்கொண்டு சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### (உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரல் பற்றி சபை அறிந்திருக்காமையால் அந்த குறிக்கோளுக்கான உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேச மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட கால திட்டங்கள் 2017 திசெம்பர் 31 திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஆண்டின் போது பெக்கோ லோடர் வாடகைக்கு கொடுத்ததன் மூலம் 227.91 இயந்திர மணித்தியாலங்களுக்காக ரூபா 435,119 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் அதிகார பிரதேசத்தில் காணப்பட்ட 12 நீர் செயற்திட்டங்களில் 812 நுகர்வோருக்கு நீர்மானி பொருத்தப்படாமல் மாதாந்தம் ரூபா 100 சாதாரண கட்டணமொன்று மற்றும் வர்த்தக அலுவல்களுக்கு ரூபா 300 தொகையும் அறவிடப்பட்டிருந்தது.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் பதவியணி வெற்றிடங்கள் 04 மற்றும் மிகைகள் 24 காணப்பட்டது.

## 3.4 செயற்பாட்டு திறமையின்மை

### (அ) வீதவரி பெறுமதி மதிப்பீடு செய்தல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 134(1) இன் பிரகாரம் முன்னேற்றப்பட்ட கிராமிய பிரதேசங்களை இனங்கண்டு புதிய வீதவரி கட்டணம் பெறுமதி மதிப்பீடு மேற்கொண்டு வருமானத்தை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனினும் வீதவரி செலுத்தும் 1,675 நுகர்வோருக்காக புதிய வீதவரி பெறுமதி மதிப்பீட்டினை அமுல் நடாத்தி இருக்கவில்லை.

(ஆ) 1980 திசெம்பர் 02 திகதி 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆனையாளரின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை வாடகை பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை.

## 3.5 பெறுகை

### 3.5.1 பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான சபையினால் வருடாந்த பெறுகை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

சபையின் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் உடன் இணக்கஞ் செய்த போது கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீட்டு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | குறைபாடு |
| --- | --- | --- |
| (அ) | கணக்கீடு | (i) மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் சமர்பித்திருக்காமை.<br>(ii) பதிவேடுகள் பேணப்படாமை. |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் | (i) சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்காமை.<br>(ii) காணி மற்றும் கட்டிடங்களின் காணி உறுதிகள், சாட்டுதல் கட்டளைகள், காணப்பட்டமை.<br>(iii) காணி கட்டிடங்கள் வருடாந்தம் கணிப்பீடு மேற்கொள்ளாமை. |